அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (இரு பாலர்),

மணல்மேடு, மயிலாடுதுறை மாவட்டம்- 609 202.

நாள்: 17-08-2022.

## சுற்றறிக்கை

2022-2023ஆம் கல்வியாண்டிற்கான

இறுதி கட்ட மாணாக்கர் சேர்க்கை அறிவிப்பு

மயிலாடுதுறை மாவட்டம், மணல்மேடு, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2022-23ஆம் ஆண்டிற்கான இளங்கலை மற்றும் இளமறிவியல் இறுதி கட்ட மாணாக்கர் சேர்க்கைக்கான கலந்தாய்வு வரும் 23-08-2022 மற்றும் 24-08-2022 ( செவ்வாய் மற்றும் புதன்கிழமை ) மதிப்பெண் அடிப்படையில் நடைபெற உள்ளது . 23-08-2022 அன்று இளமறிவியல் (B.Sc) கணிதம், இயற்பியல், வேதியியல் மற்றும் கணினி அறிவியல் துறைகளுக்கும் மற்றும் 24-08-2022 அன்று இளங்கலை B.Com., வணிகவியல், B.A., தமிழ், ஆங்கிலம், வரலாறு, மற்றும் B.B.A., வணிக நிர்வாகவியல் ஆகிய துறைகளுக்கும் ஏற்கனவே விண்ணப்பம் செய்திருந்த அனைத்து வகுப்பினை சார்ந்த மாணவ / மாணவியர்களும் கலந்து கொள்ளலாம்.

இதுவரை விண்ணப்பிக்காத மாணாக்கர்களும் 17-08-2022 அன்று முதல் கல்லூரி அலுவலகத்தில் சேர்க்கை விண்ணப்பம் பெற்று பூர்த்தி செய்து அதனை சமர்ப்பித்து இக்கலந்தாய்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஏற்கனவே சேர்க்கையான மாணவ /மாணவியர்கள் பாட மாற்றம் கோர விரும்பினாலும் இக்கலந்தாய்வில் கலந்துகொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

கலந்தாய்வில் கலந்து கொள்பவர்கள் தங்கள் மாற்றுச் சான்றிதழ், மதிப்பெண் சான்றிதழ், ஆதார் அட்டை, வங்கிக் கணக்குப் புத்தகம் ஆகியவற்றின் உண்மைச் ( Original ) சான்றிதழ்களுடன், நகல் ( நகல் (Xerox), 5 பிரதிகள், நிழற்படம் (Photo)- 5 பிரதிகள் எடுத்துக் கொண்டு தங்கள் பெற்றோர்களுடன் கலந்து கொள்ள வேண்டும்.

கலந்தாய்வில் கலந்து கொண்டு சேர்க்கைப் பெற்றவர்கள் சேர்க்கைக் கட்டணத்தை அன்றே அலுவலகத்தில் செலுத்த வேண்டும். மாணாக்கர்கள் சேர்க்கைத் தொடர்பான விவரங்களை http://gascmlmd.in என்ற இணையதளத்தில் காணலாம். குறுஞ்செய்தி மற்றும் கைப்பேசி மூலமாகவும் மாணவர்களுக்கு கலந்தாய்வு விவரங்கள் தெரிவிக்கப்படும்.

17/8/22

முதல்வர்

Principal
Govt. Arts & Science College
Manalmedu - 609 202
Mayilauthurai District